# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 17 வெள்ளிக்கிழமை 02.08.2024 கதிர் 319




# கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 266 மில்லியன் ரூபா திட்டத்தில் அமைக்கப்பட்ட கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இன்று காலை யாழ்ப்பாணம் தாளையடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்த, வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு செயலர் நபீல், நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் அமைச்சர் காதர் மஸ்தான் ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரட்ணாயக்க வடக்கு மாகாண அவைத் தலைவர் சீவிகே சிவஞானம், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, இராணுவ யாழ் மாவட்ட தளபதி வந்தன விக்குரமசிங்க, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு. பிரபாகரமூர்த்தி, ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதி சக்காவா, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தலைவர், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், நிறுவனத் தலைவர்கள், திணைக்கள தலைவர்கள், உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

2➤



## இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

### ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதால் எடுக்கப்பட்ட முடிவு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இம்மாதம் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதால்பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டள்ளது. தேர்தல் முடிவடைந்த பின்னரே அவரது விஜயத்துக்கான திகதி தீர்மானிக்கப்படும் என்றும் தெரியவந்திருக்கின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஜுன் 20 ஆம் திகதி இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது இந்தியப் பிரதமரின் விஜயம் தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கு முன்னர் புதுடில்லியில் நடைபெற்ற இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்த போதும், இந்தியப் பிரதமரின் கொழும்பு விஜயம் தொடர்பாகப் பேசப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு கடந்த வாரம் வெளியிடப்பட்டதையடுத்து 2➤

## செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு

### இந்தியா, ஜெர்மனியில் இருந்து ஆய்வாளர்களும் பங்கேற்பு

(ஹஸ்பர் ஏ.எச்)



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக களத்தின் பங்களிப்புடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் ஆரம்பமானது.

உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு இன்றும் நாளையும் மட்டக்களப்பில் இடம்பெறும்.

இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக கல்லடியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் ஆகியோர் திறந்துவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்து 1000 இற்கும் மேற்பட்ட தமிழ் கலைஞர்களின் பங்குபற்றலுடன் ஊர்தி பவனி மற்றும் கலை நிகழ்வுகளுடன் வெபர் 2➤

## சென்னை – பலாலி சேவையில் இன்டிகோவும் இணைகிறது

### செப்டம்பர் 1 இல் ஆரம்பம்; பதிவுகளை மேற்கொள்ளலாம்




பலாலி சர்வதேச விமான நிலையத்தின் யாழ்ப்பாணத்திற்கும் - சென்னைக்கும் இடையிலான விமான சேவையை இன்டிகோ எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் தினசரி சேவையாக ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிலையில் இதற்கான ஆசன ஒதுக்கீட்டினை இன்டிகோ விமான இணையத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இதற்கு Atr72 ரக விமானம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து பிற்பகல் 3.55 மணிக்கு புறப்படும் 2➤



## புத்தாக்கத் திருவிழா

புதுமை, தொழில் நுட்பம் தொழில் முனைவு , ஆக்கத்திறன் கண்காட்சி இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

யாழ் IT Hub இன் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தல் இன்று காலை ஆரம்பமான குறித்த கண்காட்சி நாளை மற்றும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

கண்காட்சியை பார்வையிடுவதற்கா அதிகமான பாடசாலை மாணவர் வருகை தந்தவண்ணம் இருக்கின்றனர்.

## மஹிந்த – ரணில் திடீர்ச் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபஸவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு- விஜேராமவில் உள்ள மஹிந்த ராஜபஸ வின் இல்லத்தில் நேற்றிரவு 7 மணியளவில் குறித்த சந்திப்பு இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் ஒரு மணித்தியாம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும்பொது ஜனபெரமுன தனியான வேட்பாளரை களமிறக்குவதற்கு திட்டமிட்டுள்ளமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதில்லை என்றும் தனியான வேட்பாளர் ஒருவரை களமிறக்கவும் பொது ஜன பெரமுனயின் அரசியல் குழு கடந்த வாரம் எடுத்த முடிவையடுத்து அக்கட்சிக்குள் நெருக்கடிகள் அதிகரித்துள்ளது. ரணிலுக்கான ஆதரவும் அதிகரித்துள்ளது. இந்தப் பின்னணியிலேயே நேற்றைய சந்திப்பு இடம்பெற்றது.

## கடல்நீரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் கடந்த 2015 ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கு மீனவ மக்களின் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பல்வேறு தாமதங்களுக்கு மத்தியில் இன்று திறந்து வைக்கப்பட்டது. இதனூடாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர்வழங்கல் வடிகாலமைப்பு பிரிவிற்க்குட்பட்ட 3 இலட்சம் மக்கள் பயனடைவார்கள் என ஏதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு உரை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது வடக்கில் அதி பெறுமதி கூடிய திட்டம் என்றும் யாழ்ப்பாணத்திற்கான ஆற்றுநீர் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்றும் இதனால் யாழ்ப்பாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தில் மின்சார செலவீனம் அதிகரிப்பதால் நீரின் பெறுமதி அதிகம். இதனால் சூரிய மின்சக்தியை பயன்படுத்தி உற்பத்தி செலவீனத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்ததுடன், மேலும் யாழில் சிமாட் விவசாயம் மேற்கொள்ள வதற்க்குரிய வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும் என்றும் உறுதியளித்தார் .

இந்திய நிதி உடன் படிக்கையில் காங்கேசன்துறை நவீன மயமாக்கப்படும் என்றும், பலாலியை அபிவிருத்தி செய்து சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படும் என்றும் தெரிவித்த ஜனாதிபதி, வரும் காலங்களில் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த ஒரு பிரதேசமாக மாறும் என்றும், தாளையடி கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்க்கு உதவியளித்த ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் நன்றி தெரிவித்தார்.

இதேவேளை தாளையடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தாளையடிக்கான கிராம சேவகர் பிரிவை உடனடியாக செயற்படுத்துமாறும் உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

## செந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மைதானத்தை நோக்கிவிழாவில்பங்குபற்றுவோரும், பொது மக்களும் நடைபவணியாக வந்தடைந்தனர்.

வெபர் மைதானத்தில் இலங்கை, இந்தியா மற்றும் ஜெர்மனியை சேர்ந்த பேராசிரியர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், தமிழ் கலைஞர்களின் வருகையுடன் மங்கள விளக்கேற்றப்பட்டு கலைவிழா ஆரம்பமானது.

## சென்னை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விமானம் சென்னை விமான நிலையத்தினை பிற்பகல் 5.10 மணிக்கு சென்றடையும்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து பிற்பகல் 01.55 மணிக்கு புறப்படும் விமானம் பிற்பகல் 03.10 மணிக்கு வந்தடையும்.

பயணி ஒருவர் 30 கிலோ பொதியாகவும் 7 கிலோ கை பொதியாகவும் எடுத்துச் செல்ல முடியும்

## இந்தியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியப் பிரதமரின் விஜயம் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

செப்ரெம்பர் 21 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கவனத்தைக் குவித்திருப்பதால், வெளிநாடுகளின் தலைவர்களுடனான தொடர் பாடல்களை இலங்கை அரசாங்கம் மட்டுப்படுத்தியுள்ளது.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஒகஸ்ட் 15 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது கட்டுப்பணங்களைச் செலுத்தியுள்ளார்கள்.

அண்மைக்காலத்தில்இலங்கை இந்திய உறவுகளைப் பொறுத்தவரையில் புதிய அணுகுமுறைகளைக் காணமுடிந்து. இருநாடுகளுக்கும் இடையில் பாதை அமைப்பது, மின் சக்தி வழங்கல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டு இணக்கம் காணப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறான அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும், இவற்றைத் தொடர வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது கொழும்பு விஜயத்தின் போது வலியுறுத்தியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருப்பதால் மாலைதீவு மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசு ஆகியற்றின் தலைவர்கள் இலங்கைக்கு முன்னெடுக்கவிருந்த விஜயங்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# 20 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் கைது

*யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் இன்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.*

*யாழ். வளைவுக்கு அருகில் இளைஞன் ஒருவர் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இளைஞனை கைது செய்துள்ளனர்.*

*கைது செய்யப்பட்ட இளைஞன் வவுனியா பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் இவரிடமிருந்து 20 கிலோ 175 கிராம் கஞ்சா போதை பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருளை, கைது செய்யப்பட்ட இளைஞனையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் அதிரடி படையினர் ஒப்படைத்துள்ளனர்.*



# திருமலை மாவட்ட எம்.பி. குகதாசனுக்கு வரவேற்பு

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்களின் கௌரவிப்பு நிகழ்வானது திரியாய் தமிழ் மஹா வித்தியாலயத்தில் திரியாய், கட்டுகுளம், கல்லம்பத்தை, செந்தூர் ஆகிய ஊர் மக்களால் இன்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பாடசாலை முதல்வர், இலங்கைத் தமிழரசுக் கட்சி மாவட்டக் கிளை உறுப்பினர், திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க உறுப்பினர், ஊர் பொதுமக்கள், நலன்விரும்பிகள், பள்ளி ஆசிரியர்கள் , மாணவர்கள் , என பெருந்திரளானவர் பங்கு பெற்றனர். இந்த நிகழ்வு மறைந்த பெருந்தலைவர் இரா. சம்மந்தன் ஐயாவின் நினைவேந்தலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து மங்கள விலக்கேற்றல், வரவேற்பு நடனம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றது.

# அனுரகுமாரவுடன் முக்கிய சந்திப்பு



இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் துமிந்த /ஹலங்கமுவ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மக்கள்விடுதலை முன்னணி பிரதான அலுவலகத்தில் நேற்று மாலை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் தொகுக்கப்பட்ட 'விஷன் 2030 - ஐந்தாண்டு பொருளாதாரத் திட்டம்' பிரசுரத்தின் பிரதி ஒன்று இதன்போது தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் துணைத் தலைவர் கிரிஷான் பாலேந்திரா, பிரதி உப தலைவர் பிகுமல் தேவரதந்திரி மற்றும் பணிப்பாளர் சபையின் பிரதிநிதிகளான அமல் கப்ரால், சரத் கனேகொட, சுபுன் வீரசிங்க, வினோத் ஹைத்ரமணி மற்றும் பேராசிரியர் அனில் ஜயந்த, ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் கலந்துகொண்டனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சலுகைகளுக்காகவே மொட்டு எம்.பி.க்கள் ரணிலை ஆதரிப்பதாக தெரிவிக்கிறார்கள்

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்துள்ளதாக கூறப்படுவதில்

உண்மை உள்ளதா என்ற சந்தேகம் எழுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். சலுகைகளுக்காகவே இவர்கள் ரணிலை ஆதரிக்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபையால் நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு –

“மொட்டுக் கட்சியின் முழுமையான ஆதரவை தனக்கு பெற்றுக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்யாத முயற்சிக ளில்லை. இறுதியில் அவரின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. அந்தக் கட்சி வேறு வேட்பாளர் ஒருவரை நியமிக்க தீர்மானித்துள்ளது. இந்நிலையில் மொட்டுக் கட்சியின் 92 எம்.பிக்கள் ஆதரவளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஆனால் அந்த எண்ணிக்கை தொடர்பில் பிரச்சினை உள்ளது. அந்தக் கூட்டத்திற்கு சென்ற அனைவரும் அந்தக் கூட்டத்தின் நோக்கம் தொடர்பில் அறிந்திருக்கவில்லை. அந்தக் கூட்டத்திற்கு சென்ற சிலர் எழுந்து சென்றுள்ளனர். அவர் கள் மொட்டுக் கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிப்பார்கள் என்று கூற முடியாது.

இதேவேளை ஜனாதிபதியுடன இணைந்தவர்களுக்கு கீழ் மட்ட மக்களை இணைத்துக் கொண்டு பயணிக்க முடியுமா என்பது தெரியவில்லை. இவர்களுடன் மக்கள் ,ருக்கின் றார்களா என்பதும் பிரச்சினையாகும்.

மக்கள் வேறு நிலைப்பாட்டில் ,ருக்கின்றனர். தற்போதைய நாடாளுமன்றம் மக்களை பிரதிநித்துவப்படுத்தவில்லை. இந்த நாடாளுமன்றம் செல்லாக் காசாவிட்டது. ,தனால் எம்.பிக்கள் என்ன தீர்மானம் எடுத்தாலும் மக்கள் அவர்களுடன் சேர்ந்து தீர்மானம் எடுக்கப் போவதில்லை.

மொட்டுக் கட்சியென்பது மகிந்த ராஜபக்ஷவை அடிப்படையாகக் கொண்டது. கட்சியின் கீழ் மட்டத்தினரின் முடிவுகளும் அப்படிதான் இருக்கும். இவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதானது சலுகைகளை அனுபவிப்பதற்காகவே ஆகும். இதேவேளை தன்னுடன் எம்.பிக்கள் இருக்கின்றனர் என்ற நம்பிக்கை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ,ருக்குமாக இருந்தால் அவர் தேர்தலை இலகுவில் நடத்தவே முயற்சிப்பார். ஆனால் அவர் நம்பிக்கை ,ல்லாத காரணத்தினாலேயே அவர் தேர்தலை குழப்ப முயற்சிக்கின்றார்” இவ்வாறு பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

# பொது ஜன பெரமுனவின் தாமதத்துக்கு வேட்பாளர்களின் தயக்கம் காரணமா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பில் வேட்பாளரை களமிறக்குவதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ள போதும், அதற்கான ஆதரவு குறைந்துள்ளமையாலும் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளமையாலும் கட்சி சார்பில் வேட்புமனுவை சமர்ப்பிக்க பலரும் தயக்கம் காட்டுவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வாரம் அறிவிக்கப்படு என்று தெரிவிக்கப்பட்ட வேட்பாளர் அறிவிப்பு அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவிற்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளே இதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகிறது. பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் தொண்ணூறு வீதமானோர் ஜனாதிபதியுடன் இணைந்துள்ளனர். மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள் ளார்கள்.

இவ்வாறான காரணங்களால் பொதுஜன பெரமுனவிற்கான மக்கள் ஆதரவு மற்றும் கட்டமைப்புக்களின் பலம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளமையினால் பொதுஜன பெரமுனவில் ,ருந்து ஜனாதிபதி வேட்பாளராகக் காத்திருந்த சிலர் தயக்கம் காட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் தாமதமாகியுள்ளமைக்கு ,துவும் காரணம் எனக்கூறப்படுகின்றது.

எனினும் வேட்பாளருக்கான கட்டுப்பணம் செலுத்துவதற்காக இறுதித் திகதி எதிர்வரும் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைவதால் அதற்கு முன்பதாக கட்சியின் வேட்பாளர் தொடர்பில் இறுதி முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு பொதுஜன பெரமுன தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக்க பெரரேரா, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஐவரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் இவர்களிலிருந்து ஒருவரை வேட்பாளராக அறிவிப்பதற்கான முயற்சிகள் ,டம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலை குறைப்பு



சதொச நிறுவனம் பல அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இது இன்று முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விலை குறைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கிழங்கு (சீனாவில் இருந்து இறக்குமதி) 1 கிலோ - 240.00 வெள்ளை கௌபி 1 கிலோ - 998.00

பெரிய வெங்காயம் (இந்தியாவில் இருந்து இறக்குமதி) 1 கிலோ- 265.00, சிவப்பு கௌபி 1 கிலோ - 940.00 , கீரி சம்பா 1 கிலோ - 254.00 , பிரவுன் சீனி 1 கிலோ - 370.00 , சிவப்பு பருப்பு 1 கிலோ - 285.00 , வெள்ளை சீனி 1 கிலோ - 254.00.

# சூரிய மின்கல மின்சார உற்பத்தி சம்பந்தமான கலந்துரையாடல்

(எம்.எம்.ஜெஸ்மின)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபை ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டு திட்டங்களுக்கு சூரிய மின்கல மின்சார உற்பத்தி மூலம் மின்சார வசதிகளை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக குறித்த வீடுகளில் வாழும் குடும்பங்களின் மின்சார தேவைகளை இலவசமாகவும் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை இலங்கை மின்சார சபைக்கும் விற்பனை செய்வதற்குமான நடவடிக்கை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஒப்பந்த காலத்துக்கு பிறகு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் சூரியமின்கலத் தொகுதிகள் குறித்த பயனாளிகளுக்கு சொந்தமாவதுடன் அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மேலதிக மின்சாரத்தை இலங்கை மின்சார சபைக்கு நேரடியாகவே விற்பனை செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தை பெற முடியும் எனவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர் எம் பி ரத்நாயக,கௌரவ ஆளுநர் அவர்களின் செயலாளர் எம் மதநாயக,தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் ராஜிவ் சூர்யாராச்சி, உப தவிசாளர் லக்ஷ்மன் குணவர்தன, பொது முகாமையாளர் கே ஏ ஜானக, திருகோணமலை மாவட்ட முகாமையாளர் பொறியாளர் நிமல் போன்ற அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



## சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

இந்த உற்சவம் கடந்த 18 நாட்கள் பகல் இரவுத் திருவிழாக்களாக நடைபெற்று வருகிறது .

தீர்த்த உற்சவத்திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

ஆலயபிரதமகுருசிவஸ்ரீசண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில்ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்த்தம்அன்று பிதிர்க்கடன்செலுத்துகின்றவர்களுக்கு வசதியாக சிவாச்சாரியார்களை உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றுகின்ற வேலை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# சொகுசு பஸ் – லொறி விபத்தில் 8 பேர் காயம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹட்டன் -நுவரெலியா பிரதான வீதியின் பாமஸ்டன் பகுதியில் லொறி ஒன்றுடன் தனியார் சொகுசு பஸ் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் இன்று வெள்ளி கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது . விபத்தின் போது பஸ்ஸில் பயணித்த 8 பேர் காயங்களுக்குள்ளான நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

நுவரெலியாவில் இருந்து ஹட்டனை நோக்கி பயணித்த தனியார் சொகுசு பஸ் தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த லொறி என்பன இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது .

சம்பவம்தொடர்பில்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.








## மாற்றுத் திறனாளிகளின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் நிகழ்வு

மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் மாத்தறை அமெரிக்கன் கோணர் இளைஞர் மன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் நிகழ்வொன்றினை ஒழுங்கு செய்திருந்தனர்.

“பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்கம், பிரதிநிதித்துவம் மற்றும் சொந்தமான உணர்வைத் தழுவுவது உலகத்தைப் பற்றிய தமது கருத்துக்களை ஆழமாக மாற்றும்.” போன்ற விடயங்களை தழுவியதாக அமைந்திருந்த இந்த நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான கலை மற்றும் இசை பட்டறையை என்பன இடம்பெற்றன.

மேலும் இந்த முன்முயற்சி படைப்பாற்றலை ஊக்குவித்தது, தடைகளை உடைத்து, வேறுபாடுகளை மதித்து ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது.

# விசேட தொழிற் பயிற்சி பாடநெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்



(ிில்சாத் பர்வீஸ்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை (2023) எழுதிய மாணவர்களுக்கான 3ம் நிலை கல்வியினூடாக தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், 3ம் நிலை மற்றும் தொழில் வழிகாட்டல் ஆணைக்குழு ஆகியவற்றின் ஒன்றிணைப்புடன் நடாத்தப்பட்ட விஷேட தொழிற் பயிற்சிப்பாடநெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் எம்.டீ.எம்.ஜனூபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தினுடைய செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா கலந்து கொண்டார்.

மற்றும் கௌரவ அதிதிகளாக மாவட்ட ஒருங்கினணப்பாளரும் அம்பாறை மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.நடனகுமார் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தினுடைய திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.எ. மௌலானா மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய தேசிய பாடசாலை பிரதி அதிபர்களான எ.ஜவாஹிர் , எம்.வை.லாபிர் யூசுப் , எம்.சி.பர்சான் மற்றும் இந் நிகழ்ச்சி திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவுரையினை சம்மாந்துறை பிரதேச செயலகத்தினுடைய திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.எ. மௌலானா வழங்கி இருந்தார். இந் நிகழ்ச்சி திட்டமானது கடந்த மூன்று மாதங்களாக பாடசாலையில் இடம்பெற்று நிறைவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# மன்னார் புனித சேவியர் கல்லூரி சாதனை

மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான "செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வில் மன்னார் புனித சேவியர் கல்லூரி ஆண்களுக்கான தரம் 3 , தரம் 4 மற்றும் தரம் 5 ஆகிய வகுப்பு பிரிவுகளில் முதலிடம் பெற்று சாதனை படைத்து மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நல்லிணக்க செயலக செயலமர்வு




(வி.ரி. சகாதேவராஜா)

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் செயலமர்வு

திருக்கோவில் பிரதேச செயலாளர் .தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, டாக்டர் யூ.வி. தங்கராசா, வஸ்னியா, கொத்தலாவல ஆகியோர் பிரதானிகளாக கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும் திருக்கோவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.அனோஜா உஷாந்த் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

இதன்போது பங்கேற்பாளர்கள் தங்கள் எண்ணங்கள் அனுபவங்கள் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க செயல்முறை தொடர்பாக பரிந்துரைகளை பகிர்ந்து கொண்டனர்.




## தாய்ப்பாலூட்டலை ஊக்குவித்து குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த நடவடிக்கை




(அஸ்ஹர் இப்றாஹிம்)

தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கவும், குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஆகஸ்ட் 1 முதல் 7ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி சுகாதார அமைச்சினால் தாய்ப் பாலூட்டல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து இந்த மதிப்பீடு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்முனை பிராந்தியத்திலுள்ள குழந்தைப் பேறு இடம்பெறுகின்ற சகல வைத்தியசாலைகளிலும் இந்த மதிப்பீடு ஆரம்பிக்கப்பட இருப்பதனால் இது தொடர்பாக துறைசார்ந்த உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் வகையில் பயிற்சிக் கருத்தரங்கொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இந்தப்பயிற்சிக் கருத்தரங்கில் கல்முனை பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறு வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தாய்ப்பாலின் மகத்துவம், தாய்ப்பாலால் ஏற்படும் உடல், உள மற்றும் ஆத்மீக நன்மைகள், தாய்ப்பாலூட்டல் சம்பந்தமான சட்ட கோவைகள், தாய் சேய் நேய வைத்தியசாலைக்குறிய 10 படிமுறைகள் எனும் தலைப்பில் விரிவுரையாற்றப்பட்டது. அத்துடன் குறித்த வேலைத்திட்டத்தினை இணையத்தின் ஊடாக மதிப்பீடு செய்வதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டொக்டர் எஸ். என்.றொஷான்ந், டொக்டர் எப்.எம்.ஏ.காதர், பிராந்திய தாய்சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்தியர் டொக்டர் எம்.எச்.றிஸ்பின், டொக்டர் ஏ.ஏ.யுரேன் இந்நிகழ்வில் வளவாளர்களாக கலந்துகொண்டனர். குறித்த நிகழ்வானது சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# மணல் ஏற்றிய 13 பேர் கைது

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனங்கண்டி, முரசுமோட்டை, பரந்தன் ஆகிய பகுதிகளில் இருந்து அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றியமை மற்றும் மணல் அகழ்வு தொடர்பில் 13 பேர் கைது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பனங்கண்டி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்களும், முரசு மோட்டை மற்றும் பரந்தன் பகுதியில் ஏ 35 பிரதான வீதியில் அனுமதிக்கப்படாத பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 11 டிப்பர்களும் அதன் சாரதிகளும் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பணவீக்கம் உயர்ந்தது

கொழும்பு நுகர்வோர் விலைச சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த ஜூன் மாதம் 1.7 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஜூலை மாதம் 2.4 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அதன்படி, கடந்த ஜூன் மாதம் 1.4 பதிவான உணவுப்பணவீக்கம் ஜூலையில் 1.5 சதவீதமாகவும்,ஜூன் மாதம்

1.8 சதவீதமாகப் பதிவான உணவல்லாப் பணவீக்கம் ஜூலையில் 2.8 சதவீதமாகவும் உயர்வடைந்தன.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்னின் மாதாந்த மாற்றம் ஜூலையில் 0.44 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட 0.03 சதவீத அதிகரிப்பும், உணவல்லாப்பொருட்கள், சேவைகளின்விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.47 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்தன. பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப்பிரதிபலிக்கின்றமையப் பணவீக்கம் கடந்த ஜூலை மாதம் 0.44 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது. இது இவ்வாறிருக்க பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்டு, பணவீக்கமானது எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடைந்து, நடுத்தர காலத்தில் அம்மட்டத்துக்கு மேல் பதிவாகும் என மத்திய வங்கி எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

# தென்னை செய்கையாளருக்கு உதவ அவசர இலக்கம் 1916

தென்னை பயிர்ச் செய்கை தொடர்பான வெள்ளை ஈ நோய் உள்ளிட்ட ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால்

விவசாயிகளுக்கு நேரடியாக அறிவிக்கக்கூடிய தொலைபேசி இலக்கத்தை வழங்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர, தென்னைச் செய்கை சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இதன்படி, தென்னைச் செய்கை தொடர்பான எந்தவொரு பிரச்சினையையும் இலகுவாக விசாரிப்பதற்கான இந்த அவசர எண் 1916 என்ற இலக்கத்தை எதிர்வரும் திங்கட்கிழமை அறிமுகப்படுத்துவதற்கு தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.2024இல் வெளியிடப்பெற்றது.